## மே – 04 – வெள்ளி

**“நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை: நான் தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன். நீங்கள் கனிதரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவுமே உங்களை ஏற்படுத்தினேன்.”**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 15 : 22 - 31

அக்காலத்தில் திருத்தூதர்களும் மூப்பர்களும் திருச்சபையார் அனைவரும் தம்முள் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோக்கியாவுக்கு அனுப்புவது என்று தீர்மானித்தனர். அவ்வாறே அவர்கள் சகோதரர்களிடையே முதன்மை இடம் பெற்றிருந்த பர்சபா என அழைக்கப்பட்ட யூதாவையும் சீலாவையும் தேர்ந்தெடுத்தார்கள்.பின்பு அவர்கள் ஒரு கடிதத்தை எழுதி அவர்கள் கையில் கொடுத்து அனுப்பினார்கள். அக்கடிதத்தில், ”திருத்தூதரும் மூப்பரும் சகோதரருமாகிய நாங்கள் அந்தியோக்கியா, சிரியா, சிலிசியா ஆகிய இடங்களிலுள்ள பிற இனத்துச் சகோதரர் சகோதரிகளுக்கு வாழ்த்துக் கூறுகின்றோம்.எங்களுள் சிலர் அங்கு வந்து தங்களுடைய பேச்சால் உங்களது மனத்தைக் குழப்பி உங்களைக் கலக்கமுறச் செய்தனர் என்று கேள்விப்பட்டோம். இவர்களுக்கு நாங்கள் எந்தக் கட்டளையும் கொடுக்கவில்லை. எனவே, நாங்கள் ஒருமனத்துடன் கூடிவந்து சிலரைத் தேர்ந்தெடுத்து எம் அன்புக்குரிய பர்னபா, பவுல் ஆகியோரோடு உங்களிடம் அனுப்புவதென்று தீர்மானித்தோம். இவர்கள் இருவரும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்காகத் தங்கள் உயிரையும் கொடுக்கத் துணிந்தவர்கள்.எனவே, நாங்கள் யூதாவையும் சீலாவையும் உங்களிடம் அனுப்புகிறோம். அவர்கள் நாங்கள் எழுதுகிற இவற்றைத் தங்கள் வாய்மொழி மூலம் உங்களுக்கு அறிவிப்பார்கள். இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எந்தச் சுமையையும் உங்கள் மேல் சுமத்தக்கூடாது என்று தூய ஆவியாரும் நாங்களும் தீர்மானித்தோம்.சிலைகளுக்குப் படைக்கப்பட்டவை, இரத்தம், கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்தவை மற்றும் பரத்தைமை ஆகியவற்றை நீங்கள் தவிர்த்து உங்களைக் காத்துக்கொள்வது நல்லது. வாழ்த்துகள்” என்று எழுதியிருந்தார்கள். யூதாவும் சீலாவும் விடைபெற்று அந்தியோக்கியா வந்தனர். அங்கு மக்களைக் கூட்டிக் கடிதத்தைக் கொடுத்தனர். அதை வாசித்ததும் அவர்கள் ஊக்கமடைந்து மகிழ்ச்சியுற்றார்கள்.

**பதில்பாடல் :** என் தலைவரே மக்களிடையேஉமக்கு நள்றி செலுத்துவேன்

### நற்செய்தி : யோவான் 15 : 12 – 17

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: ”நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை.தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை.நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள்.இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்ல மாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன் ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்.நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்.நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை“ என்றார்.

**தியானம்:** இறைமகன் இயேசு தமக்குப்பின் தமது பணியை இவ்வுலகில் தொடரவென தாம் தெரிந்து கொண்ட சீடர்களுக்கு கொடுக்கும் அறிவுரையை இன்றைய நற்செய்தியில் வாசிக்கின்றோம். அவர்கள் தமது பணியாளர்கள் என்ற நிலையில் அல்ல மாறாக நண்பர்கள் என்று அவர்களை அழைக்கின்றார். இத்தனைக்கும் இயேசு தம் சீடர்கள்மேல் கொண்டிருந்த அன்புதான் காரணமாக இருந்தது. நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் மற்றவர்களிடம் அன்பு கொண்டு பணி செய்ய வேண்டும் என்று அவர் தம் சீடர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றார். அவர்களுள் ஒருசிலர் தம் விருப்பப்படி செயற்பட்டு மக்களிடையே குழப்பத்தை உண்டு பண்ணியதை அறிந்த திருச்சபையின் மூத்ததலைவர்கள் தலையிட்டு அக் குழப்பநிலையைத் தெளிவுபடுத்துவதை இன்றைய முதல் வாசகத்தில் வாசிக்கின்றோம். “இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எந்தச் சுமையையும் உங்கள மேல் சுமத்தக்கூடாது என்று தூய ஆவியாரும், நாங்களும் தீர்மானித்தோம்” என்பதே அன்றும் இன்றும் திருச்சபை தரும் செய்தியாக அமைகின்றது. நமது விசுவாசம் ஆண்டவர் இயேசுவில் மட்டுமே கட்டப்பட்டிருக்க வேண்டும். அவர் கற்பித்தலை நாம் நன்கு அறிந்து செயற்பட வேண்டும். அனைத்துச் செயற்பாடுகளும் அன்பின் அடிப்படையில் மட்டுமே அமைந்திருக்க வேண்டும் என்பதே அவர் சித்தம். இவற்றில் நாம் உறுதியாக நிலைத்திருந்தால், அன்று போலவே இன்றும் நாம் காணும் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளிலிருந்தும், தவறான வழிநடத்தல்களிலிருந்தும், அதிகாரத் துர்ப்பிரயோகத்திலிருந்தும் நம் விசுவாசத்தை நாம் காத்துக் கொள்ளமுடியும்.